**இலங்கையில் அவசரநிலை நோயாளர் காவுவண்டிச் (அம்பியுலன்ஸ்) சேவையை அங்குரார்ப்பணம் செய்து வைத்தல் தொடர்பில் இந்தியப் பிரதமர் கௌரவ ஸ்ரீ நரேந்திர மோடி அவர்களின் செய்தி**

**ஜுலை 28, 2016, கொழும்பு**

மேதகு ரணில் விக்கிரமசிங்க, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பிரதம மந்திரி, மற்றும் எனது இலங்கை வாழ் நண்பர்களே, வணக்கம்!

இலங்கையில் அவசரநிலை நோயாளர் காவுவண்டிச் சேவையை (அம்பியுலன்ஸ்) ஆரம்பித்து வைக்கும், இந்த வைபவத்தில், இலங்கையிலுள்ள எங்களது நண்பர்களுடன் பேசுவதற்கு நானும் மற்றும் 1.25 பில்லியன் இந்தியர்களும் மீண்டும் தொழில்நுட்பத்தை உபயோகிக்க முடியுமாக உள்ளமை மிகுந்த மகிழ்ச்சியைத் தருமொரு விடயமாகவுள்ளது. கடந்த மாதத்திலேயே புனரமைப்புச் செய்யப்பட்ட துரையப்பா விளையாட்டரங்கை ஜனாதிபதி சிறிசேன மற்றும் இலங்கை மக்களுடன் சேர்ந்து மக்களிடம் அர்ப்பணிக்கின்ற கௌரவத்தை நான் கொண்டிருந்தேன்.

எங்களது பங்குடமையின் பயன்களை நேற்று நாங்கள் அர்ப்பணித்தது இலங்கையின் வட பகுதிக்காயிருந்தால், இன்று இந்த கூட்டுச் செயல் திட்டத்தின் அங்குரார்ப்பணம் எங்களது ஒத்துழைப்பை இலங்கையின் தென் மற்றும் மேல் மாகாணங்களுக்கும் கொண்டு செல்லும்.

இந்த அவசரநிலை நோயாளர் காவுவண்டிச் (அம்பியுலன்ஸ்) சேவையின் வெற்றிகரமான அங்குரார்ப்பணத்திற்கு மேதகு விக்கிரமசிங்க அவர்களை அவரது தலைமைத்துவத்திற்காக நான் பாராட்டுதல் வேண்டும். இது, எங்களது நெருக்கமான பங்குடமை எவ்வாறு களத்திலுள்ள மக்களுக்கு பயனுற வைக்கிறதென்பதை உறுதியாக எடுத்துக் காட்டுகிறது. இந்திய அனுபவங்கள், செயற்றிறன்கள் மற்றும் சிறந்த நடைமுறைகள் என்பன எவ்வாறு இலங்கையிலுள்ள எங்களது நண்பர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியுமென்பதற்கு இது மற்றுமொரு உதாரணமாகும்.

அன்பார்ந்த நண்பர்களே, இந்த செயல் திட்டம் உயிர்களைக் காப்பதற்கு உதவுவதினால் முக்கியமானது. அவசரநிலை சிகிச்சைப் பராமரிப்பை விநியோகிப்பதற்கான உங்களது செயல் திறன்களுக்கு இந்த நோயாளர் காவுவண்டிச் சேவை வலுவூட்டுவதாக அமையும். இந்த செயல் திட்டத்தின் நோக்கங்கள் இலட்சியகரமானவை. இது இலங்கையின் தென் மற்றும் மேல் மாகாணத்திலுள்ள 8 மில்லியனுக்கும் அதிகமான குடியிருப்பாளர்களைச் சென்றடையும். உள்;ர்ச் சமூகங்களில் கணிசமானதொரு தொகையினரின் தொழில் வாய்ப்புக்கான மூலமாகவும் இது இருக்குமென எனக்கு சொல்லப்பட்டது. இலங்கை அரசாங்கம் மற்றும் அதன் நியமிக்கப்பட்ட நடைமுறைப்படுத்தும் பங்காளிக்கும் இடையிலான அரச-தனியார் பங்குடமையின் வெற்றியையும் இந்த செயல் திட்டம் எடுத்துக் காட்டுவதாக அமைகிறது.

அன்பார்ந்த நண்பர்களே, உறுதியான நாகரீகத் தொடர்புகள் எங்களது இரு நாடுகளினதும் மக்களை ஒன்றுபடுத்தியுள்ளது. இன்று இந்தியாவின் செயற்றின்கள் மற்றும் உங்களது தேவைகளுக்கு இடையிலான பங்குடமை எங்களது மக்களின் வாழ்க்கைகளை மட்டும் தொடவில்லை, அது எங்களது ஆக்கபூர்வமான பிராந்தியக் கூட்டுறவின் பாதையையும் காட்டுகிறது. இலங்கையுடனான இந்தியாவின் அபிவிருத்தி ஒத்துழைப்பு இலங்கை முழுவதிலுமாக பொருளாதார நடவடிக்கைகளின் பல்வேறுபட்ட பகுதிச் செயல் திட்டங்களின் ஒரு பரந்துபட்ட பரம்பலை அனுபவிக்கிறது. ஆனால் அவை உங்களது அபிலாசைகளின் படி நிகழ்தல் வேண்டும்.

இந்தக் காரணத்தினாலேயே எங்களது கூட்டுறவுச் செயல் திட்டங்கள் மக்களினாலும் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் தலைமைத்துவத்தினாலும் ஏற்படுத்தப்படுகின்ற தெரிவுகள் மற்றும் முன்னுரிமைப்படுத்தல்களில் தங்கியுள்ளது.

நண்பர்களே, இறுதியாக நான் முன்னர் கூறியதையே மீண்டும் கூறுவதற்கு அனுமதிக்கவும்: ஓர் ஒன்றுபட்ட, உறுதியான மற்றும் சுபீட்சமான இலங்கைக்காக இந்தியா துணை நிற்கும். எங்களது பங்குடமையின் இலக்கும் அதுவாகும். அவசரநிலை நோயாளர் காவுவண்டிச் (அம்பியுலன்ஸ்) சேவை இந்த நட்பின் பிரத்தியேகமான உதாரணமாகும்.

இந்த செயல் திட்டத்தின் வெற்றிக்கு ஜனாதிபதி சிறிசேனா மற்றும் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க அவர்களை நான் பாராட்டுகிறேன்.

இலங்கையின் மக்களுக்கும் எனது சிறந்த வாழ்த்துக்களையும் மற்றும் பொருளாதார சுபீட்சம் நோக்கிய முன்னோக்கிச் செல்லுதலில் உறுதியான ஆதரவையும் நான் நல்குகிறேன்.

நன்றி, மிகுந்த நன்றி.